**செயற்பொறியாளர் பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சேப்பாக்கம், சென்னை–05.**

**முன்னிலை : பொறி.சே.மணிகண்டன், எம்.இ.,**
**செயற்பொறியாளர், பொ.ப.து.,** (கூ/பொ)

**செயல்முறை ஆணை எண். அ2 / 1219 / 2023 / நாள்.02.07.2024**

**பொருள்:** பணியமைப்பு – பொ.ப.து – த.நா.அ.ப.தொகுதி – காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு ம.கல்யாணகுமார், ஆட்சி அலுவலரின் மகள் திருமதி க.கீதாஞ்சலி என்பவருக்கு – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தகுதிகாண் பருவம் துவங்கி வைத்தல் – தொடர்பாக.

**பார்வை:**

1. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை–05 செயல்முறை ஆணை எண்.எஸ்3(3)/040909/2022, நாள்.27.12.2022.
2. கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து., திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் (கட்டடம்), சேப்பாக்கம், சென்னை–05 அவர்களின் கடித எண்.அ1/2688/2022, நாள்.29.12.2022.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.அ2/1219/2023, நாள்.04.01.2023.
4. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை மண்டலம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை–05 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்2(1)/017921/2023, நாள்.18.06.2024.
5. கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து., திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை–05 அவர்களின் கடித எண்.அ1/1392/2024, நாள்.29.06.2024.
6. அரசாணை (3ப) எண்.13, பொதுப்பணித் (பணி II (1)) துறை, நாள்.04.06.2024.

****

**ஆணை:**

பார்வை 1–ல் காணும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–05 அவர்களது செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திருமதி க.கீதாஞ்சலி இளநிலை உதவியாளரின் தற்காலிக பணிநியமனம் பார்வை 6–ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள ஆணையின்படி தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் 04.01.2023 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்யப்படுகிறது.

இவர் தனது தகுதிகாண் பருவத்தினை பணிவரன்முறைபடுத்தப்பட்ட நாளான 04.01.2023 முற்பகல் முதல் துவக்கியதாகக் கருதப்படுகிறார். மேற்படி நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

தமிழ்நாடு சார்நிலை பணித்தொகுதி விதிகள் 23(எ) (ii)–ன்படியும் தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளின்படியும் திருமதி க.கீதாஞ்சலி, இளநிலை உதவியாளர் பதவியில் மொத்த மூன்றாண்டுகள் பணிக்காலத்தில் முதல் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தில் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான பயிற்சியினை பெற்று வெற்றிகரமாக முடித்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் 04.01.2023 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொ.ப.து.,(கட்/பொ)
கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை–5.

02/7/2024

பெறுநர்
திருமதி க.கீதாஞ்சலி,
இளநிலை உதவியாளர்,
செயற்பொறியாளர் அலுவலகம், பொ.ப.து.,
கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை–5.

நகல்

1. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை–05 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து., திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை–05 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. இருப்பு கோப்பு.